# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No.162/2019

2026 –ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 16 –ம் நாள் பிரதிவாதி தரப்பு சாட்சியின் பி.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு.R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 16.02.2026**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.மாரிமுத்து (DW–1 ) | வயது | : | 75 /2026 |
| த/க பெயர் | : | திரு. முருகையன் | தொழில் | : | பில் கலக்டர் (ஓய்வு) |
| முகவரி | | சித்தமல்லி | வட்டம் | : | மன்னார்குடி |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. வாதியின் மகன் சுரேஷ் 1990ல் கிரயம் பெற்ற சொத்தின் சர்வே எண்.327/3பி என்றால் சரிதான். இதே சர்வே எண்ணில் 2018ல் ஒரு பகுதியை நான் கிரயம் வாங்கினேன் என்றால் சரிதான். நான் கிரயம் வாங்கின சொத்தானது பி.சா.ஆ.4 ஆவணப்படி புல எண்.327/3பி2 என்று உட்பிரிவு செய்யப்பட்டு எனது பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சுரேஷ் வாங்கிய சொத்திற்கு சர்வே எண்.327/3பி1 என உட்பிரிவு செய்யப்பட்டு சுரேஷ்ற்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. எனது நிரூபண வாக்குமூலத்தில் ஒரே சர்வே எண்ணில் எனக்கும், வாதிக்கும் பாத்தியம் உள்ளதால் வாதி கோருகின்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கதக்கதல்ல என்று சொல்வது தவறானது என்றால் சரிதான். கிழக்கு மேற்கு ரோட்டிற்கு தென்புறம் எனக்கு சொத்து உள்ளது என்றால் சரிதான். எனது சொத்திற்கு அடுத்த தென்புறத்தில் வாதியின் சொத்து உள்ளது என்றால் சரிதான். இரண்டு நிலத்திற்கும் பாசனமானது கொக்கன் வாய்க்காலிலிருந்து வரக்கூடிய தண்ணீர் என்றால் சரியல்ல. என்னுடைய நிலத்திற்கு எங்கிருந்து தண்ணீர் வருகிறது என்றால் கொக்கன் வாய்க்கலிலிருந்து வருகிறது. வாதியின் நிலத்திற்கு கொக்கன் வாய்க்காலிலிருந்து தண்ணீர் வருகிறது என்றால் சரியல்ல, பிரதான பாசன வாய்க்கால் கொக்கன் வாய்க்கால்.

3. எனது குறுக்கு விசாரணையில் சொல்லியுள்ள வடிகால்தான் வாதியின் பாசன கண்ணி என்றால் சரியல்ல. வழக்கிற்காக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கொக்கன் வாய்க்காலிருந்து தென்புறம் எனது நிலம் இருப்பதால் கொக்கன்

வாய்க்காலிலிருந்து நேரடியாக எனது நிலத்திற்கு பாசன நீர் எடுத்துக்கொள்ளாமல் ஏன் வடக்கு தெற்கு பக்கம் வழியாக பொந்து வழியாக பாசன நீர் எடுத்துக்கொள்கிறேன் என்றால் ஆரம்பத்திலிருந்து பொந்து வழியாகத்தான் பாசன நீர் எடுத்து வரப்பட்டது. எனது நிலத்திற்கு கொக்கன் வாய்க்காலிருந்து மேற்குபுறம்தான் பாசன வழி என்று சொல்வதற்கு எந்தவித ஆவணமும் இல்லை என்றால் சரியல்ல. மேற்கண்ட இடத்தில் பாசன வழி இருப்பதற்கான வருவாய்த்துறை ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்கண்ட வருவாய்த்துறை ஆவணங்கள் எதுவும் இல்லாமல் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

4. பி.சா.ஆ.1 ஆவணத்தில் கிரய சொத்துக்களிலிருந்து தென்புறம் உள்ள எனது நஞ்சை வயலுக்கு தண்ணீர் பாய்ச்சவும், வடியவும் எனக்கு உரிமை உண்டு, கிரயம் வாங்கிய கண்ணி வழியாகவும் தாங்கள் வடிகால் செய்ய வேண்டியது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ–1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கண்ணியானது வழக்குரையில் உள்ள ஏ, பி பாசன கண்ணி என்றால் சரியல்ல. வசந்திக்கு சொந்தமான சொத்தில் ரோட்டிற்கு தென்புறம் கிழக்கு மேற்கிலும் தென்வடலிலும் பாசன கண்ணி உள்ளது என்றால் சரியல்ல. பூமியில் மேற்கண்டவாறு அமைந்துள்ளதை வழக்கிற்காக மறுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தனி நபர் பட்டாவில் பாசன கண்ணி இருப்பதால் புல வரைபடத்தில் பாசன கண்ணி என்ற விபரம் குறிப்பிட்டிருக்காது என்றால் சரியல்ல.

5. சுரேஷ் யாரிடமிருந்து சொத்தை கிரயம் வாங்கினார் என்றால் காந்திமதி, கலைவாணியிடமிருந்து கிரயம் வாங்கினார். வா.சா.ஆ–1 ஆவணத்தில் வழக்கம்போல் தண்ணீர் பாயவும், வடியவும் வைத்துக்கொள்கிறது என பக்கம் 4ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், தாவா சொத்திற்கு தொடர்பு இல்லாத ஆவணம். வா.சா.ஆ–1 ஆவணத்தில் சொத்து விபரத்தின் சர்வே எண்.325/5, 327/3பி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கிரயம் வாங்குவதற்கு முன்பு தாவா சொத்தை சுரேஷ் கிரயம் வாங்கிய காலத்திலேயே வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள வரைபடத்தில் உள்ள ஏ, பி என்று குறிப்பிடப்பட்டுள்ள பகுதிதான் பாசன வாய்க்கால் என்றால் சரியல்ல. மேற்கண்ட பாசன வாய்க்கால் பகுதியைதான் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு எங்கள் குடும்ப சண்டையை மனதில் வைத்துக்கொண்டு இடையூறு செய்து வருகிறேன் என்றால் சரியல்ல, அந்த கண்ணி எனக்கு சொந்தமானது.

6. சுரேஷ் தாவா சொத்தை கிரயம் வாங்குவதற்கு முன்பு பாசன வாய்க்காலாக இருந்ததை நான் கிரயம் வாங்குவதற்கு முன்பு வரை யாரும்

பிரச்சனை செய்தது இல்லை, நான்தான் இடையூறு செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. எனக்கு சொந்தமான பட்டா பாசன வாய்க்காலாக இருந்தாலும் வாதியின் சொத்திற்கு பாசன வாய்க்காலாக பயன்படுத்திக்கொள்ள உரிமை உள்ளது என்றால் சரியல்ல. மேற்கண்ட பாசன வாய்க்காலாக வாதி பயன்படுத்திக்கொள்ள வசதிஉரிமை உள்ளது என்றால் சரியல்ல. தாவாபடி தீர்ப்பாக வேண்டிது என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.02.12 15:47:19 +0530

District Munsif
Mannargudi.